IHP
INSTITUTE FOR HEALTH POLICY

72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5   Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk  web: www.ihp.lk  twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 21 August 2023
நேரம் : 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk  Twitter: @ravirannaneliya

# ஜூலை மாதத்தில் என்.பி.பி./ஜே.வி.பி. மற்றும் எஸ்.ஜே.பி. முன்னிலையில் இருக்க, முக்கிய கட்சிகளுக்கான ஆதரவில் குறிப்பிடத்தக்க மாற்றமில்லை, ஆனால் பெருமளவு வாக்காளர்கள் தீர்மானம் இல்லாமல் உள்ளனர்


*IHP MRP ஜூலை 2023 பொது தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

ஜூலை 2023 இலங்கை கருத்துக்கணிப்பில் (SLOTS), வாக்களிக்கக்கூடியவர்களுக்கிடையே முக்கிய கட்சிகளுக்கான ஆதரவு முந்தைய மாதத்திலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றமில்லாமல் தங்கியிருந்தது. என்.பி.பி./ஜே.வி.பி. மற்றும் எஸ்.ஜே.பி. தலா 24% மற்றும் 23% உடன் முன்னிலையில் இருக்கின்றனர், மேலும் தலா 9% மற்றும் 8% ஆதரவுடன் எஸ்.எல்.பி.பி. மற்றும் யூ.என்.பி. உள்ளனர். ஆனால் வாக்களிக்கக்கூடியவர்களில் மிகப்பெரிய பங்கினர்–30%, எந்தவொரு கட்சியின் பெயரையும் குறிப்பிட விருப்பமில்லாமல் இருந்தனர்.




2023 ஆரம்பத்திலிருந்து என்.பி.பி./ஜே.வி.பி. மற்றும் எஸ்.ஜே.பி.க்கான ஆதரவில் பொதுவாகவே ஒரு சரிவையும், பின் தங்கியுள்ள இரு கட்சிகளான யூ.என்.பி. மற்றும் எஸ்.எல்.பி.பி.க்கான ஆதரவில் சிறிய உயர்வுகளையும் SLOTS கருத்துக்கணிப்பு தரவு கொண்டு கணிக்கப்பட்ட அன்மித்த MRP மதிப்பீடு உறுதிப்படுத்துகின்றது. வேறொரு கட்சிக்கு வாக்களிப்போம் என்று கூறும் ஆனால் கட்சியின் பெயரை குறிப்பிட விருப்பமில்லாமல் அல்லது கூற இயலாத வாக்களிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையில் பெரும் அதிகரிப்பினையும் மதிப்பீடுகள் உறுதிப்படுத்துகின்றன.

“வாக்காளர்களில் பெரும் பங்கினர் யாரை ஆதரிப்பது என தெளிவில்லாமல் இருப்பது அதிகரிப்பதை அன்மித்த முடிவுகள் மீண்டும் உறுதி செய்கின்றன. முக்கிய கட்சிகளில் ஒருவரும் மக்களிடையே நம்பிக்கை ஏற்படும் விதத்தில் தம் தரப்பினை முன்வைப்பதில் வெற்றியடையவில்லை என்பதையும், வரும் மாதங்களில் ஆதரவில் பெரும் மாற்றங்களுக்கான சாத்தியப்பாடு இருப்பதையும் இது உணர்த்தலாம்.” என்று IHPன் நிர்வாகப் பணிப்பாளர் வைத்தியர் ரன்னன்-எலிய கருத்து தெரிவித்தார்.




## முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, February 2023, “IHP MRP Voting Intentions Estimates January 2023. NPP/JVP and SJB running neck-and-neck amongst voters, but no party dominates”, SLOTS Report #2023-03.
*Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202303.pdf*

Institute for Health Policy, March 2023, “IHP MRP Voting Intentions Estimates February 2023. Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead”, SLOTS Report #2023-06.
*Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf*

Institute for Health Policy, April 2023, “Little change in voting preferences in March, with NPP/JVP maintaining a clear lead over SJB, amidst possible signs of a UNP rise. IHP MRP General Election voting intentions update March 2023”, IHP Press Release #2023-11.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230419.pdf*

Institute for Health Policy, May 2023, “NPP/JVP maintains a lead, but loses support to UNP and other parties, whilst SJB flatlines. IHP MRP General Election voting intentions update April 2023”, IHP Press Release #2023-15.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230525.pdf*

Institute for Health Policy, June 2023, “NPP/JVP support fell to 23% behind SJB on 26%, whilst support for UNP and SLPP rises amongst likely voters during May 2023. IHP MRP General Election voting intentions update May 2023”, IHP Press Release #2023-18.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease202306301.pdf*

Institute for Health Policy, July 2023, “Support for NPP/JVP and SJB fell, with evidence of growing vote disillusionment with all established parties in June 2023. IHP MRP General Election voting intentions update June 2023”, IHP Press Release #2023-28.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230727.pdf*

**IHP பற்றி**

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

**முறை**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பை மதிப்பிட அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்தி, வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression மற்றும் Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்கின்றது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மை multiple imputation என்னும் முறையின் மூலம் கருதப்படுகின்றது.

ஜூலை 2023க்கான MRP மதிப்பீடுகள் ஜூலை 2023 ல் நடத்தப்பட்ட 466 நேர்காணல்கள் மற்றும் அக்டோபர் 1 2021- ஆகஸ்ட் 13 2023 வரை நடத்தப்பட்ட 12,269 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. என்.பி.பி./ஜே.வி.பி., எஸ்.ஜே.பி. யூ., என்.பி. மற்றும் எஸ்.எல்.பி.பி.க்கான பிழை விளிம்பு 3-5% எனவும், மேலும் பிற கட்சிகளுக்கு 1–3% என்றும் மதிப்பிடப்பட்டது. மே மாத புதுப்பிப்பு முந்தைய புதுப்பிப்பைக் காட்டிலும் சமீபத்திய தரவுத் தொகுப்பைப் பயன்படுத்துவதால், முந்தைய மாதங்களுக்கான வாக்கு மதிப்பீடு மதிப்புகளில் சிறிய மாற்றங்கள் உள்ளன. பிழை விளிம்பை கணிப்பதற்கு மதிப்பீட்டில் 62 சீரற்ற உருவகப்படுத்துதல்கள் பயன்படுத்தப்பட்டன.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.